**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**
SC.No.119/2020

நாள்: 19.08.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 19.08.2026ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | ப.சா.7 /அ.த.சா.6 | ஜாதி | :----------- |
| பெயர் | பதுவைநாதன் | தொழில் | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| வட்டம் | | | |

எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர்.

<u>**முதல் விசாரணை:-**</u>

1. நான் சேலத்தில் குடியிருந்து தற்சமயம் நாமக்கல் வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணி செய்து வருகிறேன். நான் ஓமலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1ஆக இருந்தபோது தீவட்டிப்பட்டி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் ஒப்படைத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று TN 30 S 9905 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் வாகனத்தை 01.07.2019ம் தேதியன்று சுமார் மாலை 5 மணி அளவில் சம்பவயிடத்திலேயே ஆய்வு செய்து மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை வழக்கினேன். நான் ஆய்வு செய்தபோது கீழ்க்கண்ட சேதாரங்கள் காணப்பட்டது.

சேதாரம் எண்.1 –முகப்பு விளக்கு உடைந்திருந்தது.

சேதாரம் எண்.2 –முன்புறம் வாகனத்தின் பாடி சேதாரம் ஆகியிருந்தது.

சேதாரம் எண்.3 –முன்புறம் உள்ள டேஸ்போர்ட் யூனிட் உடைந்திருந்தது.

சேதாரம் எண்.4 –ஓட்டுநர் சாய்மான இருக்கை கிழிந்திருந்தது.

சேதாரம் எண்.5 –பின்புறம் வலதுபக்க டயரில் உள்ள Tubemouth உடைந்திருந்தது.

சேதாரம் எண்.6 – டீசல் பில்டர் சேதாரமாகியிருந்து.

சேதாரம் எண்.7 –இண்டிகேட்டர் ஆப்ரேட்டிங் லிவர் உடைந்திருந்தது.

சேதாரம் எண்.8 –பின்புறம் வலதுபுறம் உள்ள இண்டிகேட்டர் லைட் உடைந்திருந்தது.

மேற்கண்ட டிராக்டரில் ஏற்பட்டிருந்த சேதாரங்களின் மதிப்பு ரூ.20000/–ம் இருக்கும். வாகனம் இயக்கும் நிலையில் இல்லாததால் தடை திறன் சோதிக்க இயலவில்லை. நான் வழங்கிய மேற்கண்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என்னை மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை வழங்கும்படி வேண்டுகோள் கடிதம் கொடுத்ததாக நான் சாட்சியம் அளிக்கும் நிலையில் மேற்படி வேண்டுகோள் கடிதத்துடன் என்னென்ன ஆவணங்களை இணைத்து கொடுத்தார்கள் என்றால் பதிவு புத்தகத்தையும், காப்பீட்டு சான்றிதழையும், ஓட்டுநர் உரிமத்தையும் பொதுவாக இணைத்து கொடுப்பது வழக்கம். இந்த வழக்கிலும் அவ்வாறு கொடுத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன், சரியாக நினைவில்லை.

2. மேற்படி வேண்டுகோள் கடிதத்துடன் முதல் தகவல் அறிக்கையும் இணைத்து கொடுப்பது வழக்கம் என்றால் ஆமாம். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையும், எனக்கு கொடுத்த வேண்டுகோள் கடிதத்துடன் இணைத்து கொடுத்திருந்தாரா என்றால் எனக்கு நினைவில்லை. பொதுவாக மோட்டார் வாகன ஆய்வாளர் மோட்டார் வாகனத்தை ஆய்வு செய்யும் போது முதல் தகவல் அறிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது அவசியமா என்றால் இல்லை. வேண்டுகோள் கடிதம் மட்டுமே மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை வழங்க போதுமானது ஆகும்.

3. மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை வழங்கச்சொல்லி வேண்டுகோள் கடிதத்தில் மேற்படி டிராக்டரின் ஓட்டுநர் பெயர் சொல்லப்பட்டிருந்ததா என்றாலும், அவருடைய பெயர் எனக்கு தெரியுமா என்றாலும் நினைவில்லை. எனக்கு உதவி ஆய்வாளர் எந்த தேதியில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தார் என்றால் 01.07.2019ம் தேதியன்று கொடுத்தார். அந்த தேதி எனது அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் ஆமாம்.

4. நான் எந்த தேதியில் வானத்தை ஆய்வு செய்தேன் என்றால் அதே தேதியில் தான் ஆய்வு செய்தேன். எனக்கு கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் இணைக்கப்பட்டிருந்த முதல் தகவல் அறிக்கையின் தேதி தெரியுமா என்றால்

நினைவில்லை. சம்பவ இடத்திற்கே சென்றுதான் வாகன தணிக்கை செய்தேன் என்றால் ஆமாம். நான் வாகனத்தை பார்த்தபோது அந்த சேதாரங்கள் எப்போது ஏற்படுத்தப்பட்டிருந்தது என்ற அனுமானத்திற்கு வந்தேனா என்றால் இல்லை.

5. என்ன காரணத்திற்காக அந்த வண்டி இயங்கும் நிலையில் இல்லை என்றால் ஆயில் பில்டர் உடைந்திருந்தது. எனவே அது இயங்கும் நிலையில் இல்லை. சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் என்னிடம் சம்பவம் நடந்து ஒரு மாதத்திற்கு பின்னர் தான் தணிக்கை செய்துதரச்சொல்லி வேண்டுகோள் கடிதம் கொடுத்தார் என்றால் ஆமாம். ஏற்கனவே பழுதாகி நின்றிருந்த வாகனத்தை நான் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க வாகனத்தில் சேதாரங்கள் இருந்ததாக பொய்யாக அறிக்கை கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

6. எனக்கு கொடுத்த வேண்டுகோள் கடிதத்துடன் இணைக்கப்பட்டிருந்த முதல் தகவல் அறிக்கை நான் ஆய்வு செய்ததாக சொல்லப்படும் டிராக்டர் குறித்து எந்த வாசகமும் இல்லை என்றாலும், இதில் இருந்ததே இது பொய் வழக்கு என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

MALATHI Digitally signed by MALATHI Date: 2026.08.19 05:04:45 +0530

உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.